**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**Ar.O.P.No. 42/2022**

**நாள்.07.08.2024**

ம.சா.1 திரு.கோபிநாத் IA No.03/2024 அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் கோரிக்கைதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் உள்ள சர்வே எண். 134/1 ஆனது 2 ம் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டது. அதற்கான வரைபடம் ம.சா.ஆ.6 ஆகும். எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தை ம.சா.ஆ.6 இல் தனியாக மஞ்சள் கலரில் காட்டப்பட்டுள்ளது. எனது ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு கிழபுறத்தில் நயினார்கோவிலுக்கு செல்லும் ரோடு அமைந்துள்ளது. அந்த ரோடானது சுமார் 100 வருடங்களாக உள்ளது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட என்னுடைய நிலத்திற்கு தென்புறத்தில் சர்வே எண். 218 ல் சூரங்கோட்டை அமைந்துள்ளது. மேற்படி Data land ஆனது ஆர்ஜிதம் செய்யப்பட்ட எனது நிலத்திலிருந்து இரண்டு பர்லாங் துாரம் தள்ளி அமைந்துள்ளது. அங்கு எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லை.

**<u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எனது முதல்விசாரணையின் சொன்னது போன்று சர்வே எண். 134/1 ல் எந்த சாலையும் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 202/6 ஆனது எனது நிலத்திற்கு அருகில் உள்ளது என்றால் ஒரு பர்லாங் தள்ளி உள்ளது. இந்த வழக்கிற்காக நான் 202/6 ற்கு ஒரு பர்லாங் துாரத்தில் எனது நிலம் அமைந்துள்ளது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரோட்டிற்கும் எனது நிலத்திற்கும் நிறைய துாரம் உள்ளது என்றும் நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போன்று எனது நிலத்தின் சாலை எதுவும்

செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று எவ்வித நிலமும் நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 202/6 ல் அடிப்படை வசதிகள் இல்லை என்றால் அரசால் ஆர்ஜிதம் செய்த எனது நிலத்திலும் எவ்வித வசதியும் இருக்காது என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு தென்புறத்தில்தான் சர்வே எண். 202/6 அமைந்துள்ளது. சர்வே எண். 202/6 க்கு அடுத்த நிலமாக எனது நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது நிலமும் ஸ்டானின் சாத்தையா நிலமும் அருகருகே அமைந்துள்ளது.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .